JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-7 Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-7-சண்முகம்** | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 02.12.2025ஆம் தேதியன்று இரவு 19.00 மணிக்கு நிலையை தலைமை காவலர் ராமச்சந்திரன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது குருவரெட்டியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளர் அசோக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.306/2025, சட்டப்பிரிவுகள் 331(4), 305(a), r/w 62 BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் மாண்புமிக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் மறுநாள் 03.12.2025–ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான ராஜேந்திரன் மற்றும் பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் அசோக் குமார், ராஜவேல், பிரசாத், ராஜேந்திரன் மற்றும் பெருமாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 09.12.2025–ம் தேதியன்று நானும், நிலைய தலைமை காவலர் பூபதி ராஜ்குமார் மற்றும் காவலர் ராஜகுரு ஆகியோருடன் அன்றைய தினம் அதிகாலை 04.00 மணியளவில், குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அங்கு சந்தேகப்படும்படி நடந்து வந்த ஆஜர் எதிரியை பிடித்து

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:07:24 +0530

விசாரித்தபோது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொல்லியவர், பின்னர் அவர் பெயர் மற்றும் விலாசங்களை மாறி மாறி கூறினார். மேலும் அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார்.

பின்னர் அவரை தீர விசாரித்தபோது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்துள்ள குற்ற எண்.306/2025, சட்டப்பிரிவுகள் 331(4), 305(a), r/w 62 BNS வழக்கில் கடந்த 29.11.2025 ஆம் தேதியன்று இரவு சுமார் 11.50 மணிக்கு குருரெட்டியூரில் உள்ள ஐஓபி பேங்க், ஏடிஎம் மிஷினில் திருப்புளி, குத்தூசி, கட்டிங் பிளேயர் மூலம் ஏடிஎம் மெஷினை திறந்து அதில் உள்ள பணத்தை திருட முயன்ற கூட்டத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் அவருக்கு சட்டப்பிரிவு 35 (1)(i) BNSS அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆஜர் எதிரி அந்த அறிவிப்பினை வாங்க மறுத்துவிட்டார். பின்னர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தனது முகவரியையும் கூறியவர் ஐஓபி பேங்க் ஏடிஎம் மெசினை திறந்து அதில் உள்ள பணத்தை திருடன் முயன்ற குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி அன்றைய தினம் அதிகாலை 04.10 மணிக்கு முறைப்படி கைது செய்தும், கைது செய்த விபரத்தை அவரது அண்ணனுக்கு தெரிவித்தும், பின்னர் அவர் எவ்வித அச்சுறுத்தலோ, தூண்டுதலோ இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அன்றைய தினம் அதிகாலை 04:30 மணிக்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிகக முன்வராததால் என்னுடன் வந்த நிலைய தலைமை காவலர் மற்றும் காவலர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அண்டர் டிராயரில் மறைத்து வைத்திருந்த பச்சை கலர் கைப்பிடி உள்ள திருப்புளி ஒன்று, கருப்பு கலர் கைப்பிடி உள்ள குத்தூசி ஒன்று சிவப்பு கலர் கைப்பிடி உள்ள கட்டிங் பிளேயர் ஒன்று மற்றும் காலில் அணிந்து இருந்த கருப்பு கலர் மோல்டிங் செப்பல் ஒரு ஜோடிஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் காலை சுமார் 06.15 மணிக்கு கைப்பற்றினேன்.

பின்னர் அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அழைத்துச் சென்று அடையாளம் காட்டிய கரடிப்பட்டி ஊரில் உள்ள சுப்பிரமணி என்பவரின் கிழங்கு நிலத்தின் அருகில் உள்ள 6வது வீடு அருகில் மறைத்து வைத்திருந்த நீலம் மற்றும் கருப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி வேஷ்டி ஒன்றையும், ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்றினையும் VIJAY TAILORS M.NAGAR b–10 என்ற லேபிளுடன் கூடிய கருப்பு கலர் அரைக்கை சட்டை ஒன்றினையும் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அன்றைய தினம் காலை 07.00 மணிக்கு மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் மற்றும் கைது செய்த எதிரியுடன் நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்கவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:07:30 +0530

**பச்சை கலர் கைப்பிடி உள்ள திருப்புளி ஒன்று, கருப்பு கலர் கைப்பிடி உள்ள குத்தூசி ஒன்று, சிவப்பு கலர் கைப்பிடி உள்ள கட்டிங் பிளேயர் ஒன்று மற்றும் காலில் அணிந்து இருந்த கருப்பு கலர் மோல்டிங் செப்பல் ஒரு ஜோடி கைப்பற்றியதற்கான படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும், நீலம் மற்றும் கருப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி வேஷ்டி ஒன்றையும், ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்றினையும் VIJAY TAILORS M.NAGAR b-10 என்ற லேபிளுடன் கூடிய கருப்பு கலர் அரைக்கை சட்டை ஒன்றினையும் கைப்பற்றியதற்கான படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான **"கரடிப்பட்டியில் சுப்பிரமணி என்பவரின் கிழங்கு களத்தின் அருகில் உள்ள 6வது வீட்டில் தங்கி உள்ள வீட்டையும் தங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன், மேலும் நான் கடந்த 29.11.2025 தேதி ஏடிஎம் மிஷினில் பணம் திருட வந்தபோது நான் அணிந்திருந்த கருப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி, ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று VIJAY TAILORS M.NAGAR b-10 என்ற லேபிளுடன் கூடிய கருப்பு கலர் அரைக்கை சட்டை ஆசிவற்றை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்பது மட்டும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் காவலர்கள் பூபதி ராஜ்குமார் மற்றும் ராஜகுரு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி அசோக்குமார் என்பவரை மறுவிசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 10.01.2026 ஆம் தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 331(4), 305(a), r/w 62 BNS கீழ இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரில் இரும்பு கம்பி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். புகாரானது 2 நாட்கள் காலதாமதமாகத்தான் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். இந்த வழக்கில் சிசிடிவி பதிவுகள் எதையும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்தை ஒரு மாதம் காலதாமதமாக தான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். கைப்பற்றியதாக சொல்லப்படும் வழக்கு சொத்து அனைத்தும் வெவ்வேறு இடங்களில் கைப்பற்றியதாக முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரிடமிருந்து எந்த ஒரு ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. ஆஜர்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:07:37 +0530

எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. நான் வழக்கை முறையாக போல விசாரணை செய்யாமல் குற்றம் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:07:44 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-6- ராஜகுரு** | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.12.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவியாளர் சண்முகம் என்பவர் என்னையும், நிலைய தலைமை காவலர் பூபதி ராஜ்குமார்என்பவரையும் அழைத்துக் கொண்டு அதிகாலை சுமார் 04.00 மணியளவில் குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக நடந்து வந்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் முதலில் தனது பெயர் மற்றும் முகவரியை மாறி மாறி கூறினார். அவரை மீண்டும் விசாரித்தபோது அவர் தான் குருவரெட்டியூர், ஐஓபி வங்கி ஏடிஎம் மிஷினில் பணம் திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியை நாளை காலையில் விசாரணைக்காக நிலையம் வருமாறு கூறி கூறினார். ஆனால் எதிரி அதற்கு மறுத்துவிட்டார். பின்னர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தனது முகவரியையும் எதிரி கூறினார். அப்போதே கைதுக்கான காரணம் கூறி சிறப்பு உதவியாளர் எதிரியை கைது செய்தார். எதிரியை கைது செய்த விபரத்தை அவரது அண்ணனுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் நானும், என்னுடன் வந்த தலைமைகாவலரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்க மூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை சோதனை செய்தபோது அவர் தனது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.07 19:07:53 +0530

அண்டர் டிராயரில் மறைத்து வைத்திருந்த பச்சைப்புடி திருப்புளி ஒன்று, சிவப்பு புடி கட்டிங் பிளேயர் ஒன்று, கருப்பு புடியுடன் கூடிய குத்தூசி ஒன்று ஆகியவற்றையும், தான் அணிந்திருந்த ஒரு ஜோடி கருப்பு மோல்டிங் செருப்பையும் எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். நானும் என்னுடன் வந்த காவலரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தற்போது நீதிமன்றத்தில் உள்ள திருப்புளி, கட்டிங் பிளேயர் மற்றும் குத்தூசியை தான் அன்றைய தினம் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எங்களை அழைத்துச் சென்ற கரடிப்பட்டியூரில் உள்ள சுப்பிரமணியம் வீட்டிற்கு அருகில் இருந்து நீல நிற கட்டம் போட்ட லுங்கி ஒன்று மற்றும் ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று மற்றும் கருப்பு கலர் சட்டை ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும், என்னுடன் வந்த காவலரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தற்போது நீதிமன்றத்தில் உள்ள லுங்கி துண்டு மற்றும் சட்டையை தான் அன்று எதிரி எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்தார். பின்னர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் எதிரியை முதலில் கைது தான் செய்தோம் என்றால், சரிதான். அதன் பின்னிட்டு தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம் என்றால், சரிதான். நான் எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் நேரத்தில் எங்கு இருந்தேன், கைப்பற்றிய பொருட்கள் எல்லாம் போலீசார் கையில் வைத்திருந்தார்கள் என்றால், சரியல்ல. எதிரி வைத்திருந்தார். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி வழக்கு சொத்து எதுவும் கையில் வைத்திருக்கவில்லை என்றால், சரியல். நான் கையொப்பம் செய்த தாள்கள் அனைத்திலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் மட்டும் சம்பவயிடத்தில் வைத்து செய்தேன். மற்ற அனைத்து தாள்களிலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

நான் சொல்வது போல் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், சரியல்ல. சம்பவம்யிடத்தில் எதிரி கைது செய்ததாக சொல்லப்படும் நேரத்தில் ஆள் நடமாட்டம் எதுவும் இல்லை என்றால், சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் பொது ஜன காட்சிகள் யாரிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால், சரிதான். கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டது என்றால், சரிதான். அதில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:07:59 +0530

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், எந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் எத்தனை மணிக்கு வழக்கு சொத்தை கைப்பற்றினோம் என்றால், மாலை சுமார் 06.05 மணிக்கு கைப்பற்றினோம். எங்க வைத்து கைப்பற்றினோம் என்றால். குருவரெட்டியூர் சந்தை அருகில் வைத்து கைப்பற்றினோம்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:08:06 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-5  Witness
for Prosecution

| CC.No. | 60/2026 | Crime No. | 306/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-5-பூபதி ராஜ்குமார்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.12.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவியாளர் சண்முகம் என்பவர் என்னையும், நிலைய காவலர் ராஜகுரு என்பவரையும் அழைத்துக் கொண்டு அதிகாலை சுமார் 04.00 மணியளவில் குருவரெட்டியூர் சந்தை அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக நடந்து வந்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் முதலில் தனது பெயர் மற்றும் முகவரியை மாறி மாறி கூறினார். அவரை மீண்டும் விசாரித்தபோது அவர் தான் குருவரெட்டியூர், ஐஓபி வங்கி ஏடிஎம் மிஷினில் பணம் திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியை நாளை காலையில் விசாரணைக்காக நிலையம் வருமாறு கூறி கூறினார். ஆனால் எதிரி அதற்கு மறுத்துவிட்டார். பின்னர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தனது முகவரியையும் எதிரி கூறினார். அப்போதே கைதுக்கான காரணம் கூறி சிறப்பு உதவியாளர் எதிரியை கைது செய்தார். எதிரியை கைது செய்த விபரத்தை அவரது அண்ணனுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் நானும், என்னுடன் வந்த காவலரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்க மூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக மூன்றாக குறியீடு செய்யப்படுகிறது.**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:08:13 +0530

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை சோதனை செய்தபோது அவர் தனது அண்டர் டிராயரில் மறைத்து வைத்திருந்த பச்சைப்புடி திருப்புளி ஒன்று, சிவப்பு புடி கட்டிங் பிளேயர் ஒன்று, கருப்பு புடியுடன் கூடிய குத்தூசி ஒன்று ஆகியவற்றையும், தான் அணிந்திருந்த ஒரு ஜோடி கருப்பு மோல்டிங் செருப்பையும் எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். நானும் என்னுடன் வந்த காவலரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது நீதிமன்றத்தில் உள்ள திருப்புளி, கட்டிங் பிளேயர் மற்றும் குத்தூசியை தான் அன்றைய தினம் எதிரி எடுத்து ஆஜர் செய்தார் . **திருப்புளி அ.சா.பொ.1 ஆகவும், கட்டிங் பிளேயர் அ.சா.பொ.2 ஆகவும், குத்தூசி அ.சா.பொ.3 ஆகவும், கருப்பு நிற ஒரு ஜோடி செருப்பு அ.சா.பொ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எங்களை அழைத்துச் சென்ற கரடிப்பட்டியூரில் உள்ள சுப்பிரமணியம் வீட்டிற்கு அருகில் இருந்து நீல நிற கட்டம் போட்ட லுங்கி ஒன்று மற்றும் ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட துண்டு ஒன்று மற்றும் கருப்பு கலர் சட்டை ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும், என்னுடன் வந்த காவலரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **லுங்கி மற்றும் சட்டையை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது நீதிமன்றத்தில் உள்ள லுங்கி துண்டு மற்றும் சட்டையை தான் அன்று எதிரி எடுத்து ஆஜர் செய்தார். **லுங்கி அ.சா.பொ.5 ஆவும், துண்டு அ.சா.பொ.6 ஆகவும், சட்டை அ.சா.பொ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்தார். பின்னர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் எதிரியை முதலில் கைது தான் செய்தோம் என்றால், சரிதான். அதன் பின்னிட்டு தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம் என்றால், சரிதான். நான் எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் நேரத்தில் எங்கு இருந்தேன், கைப்பற்றிய பொருட்கள் எல்லாம் போலீசார் கையில் வைத்திருந்தார்கள் என்றால், சரியல்ல. எதிரி வைத்திருந்தார். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி வழக்கு சொத்து எதுவும் கையில் வைத்திருக்கவில்லை என்றால், சரியல். நான் கையொப்பம் செய்த தாள்கள் அனைத்திலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் மட்டும் சம்பவயிடத்தில் வைத்து செய்தேன். மற்ற அனைத்து தாள்களிலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:08:20 +0530

நான் சொல்வது போல்  எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், சரியல்ல. சம்பவம்யிடத்தில் எதிரி கைது செய்ததாக சொல்லப்படும் நேரத்தில் ஆள் நடமாட்டம் எதுவும் இல்லை என்றால், சரிதான்.  சம்பவயிடத்திற்கு அருகில் பொது ஜன காட்சிகள் யாரிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால், சரிதான்.  கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டது என்றால், சரிதான். அதில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், எந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க  நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:08:27 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani